# ஸ்ரீமத் விராட் விஸ்வப்பிரம்மணே நம:

**முன்னுரை**

இந்த பகுதி "விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை" என்ற தலைபில் 1950-ஆம் வருடம் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களாலும், அதன் இரண்டாம் பதிப்பு 2004-ஆம் ஆண்டு திரு. பொன்னுசாமி ஆச்சாரியார் அவர்களாலும் வெளியிடப்பட்ட நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இந்த இரு நூலாசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெறிவித்துக்கொள்கிறேன்.

**நன்றி**

திரு. T.M.தெய்வசிகாமணி ஆச்சாரியார்.F.R.S.A(லண்டன்)

**நன்றி**

திரு. S.பொன்னுசாமி ஆச்சாரியார்
குடியாத்தம்.

இவண்

இரா. விநாயகமூர்த்தி ஆச்சாரி. M.E
காஞ்சீபுரம்

# விஸ்வகர்மப் பிராம்மண பௌருஷேய விளக்கம்

இந்த அத்யாயத்தில் பௌருஷேய பிராம்மணர்களாகிய விஸ்வகர்ம பிராம்மணர்களுக்கும் இதர பிராம்மணர்களாகிய ஆருஷேயர்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும் அவர்கள் அவ்வாறு வழங்கப்படுவதற்கான காரணங்களையும் பார்ப்போம். பௌருஷேயர் என்பது ஆதி பிரம்மமாகிய பரமபுருஷன் முகத்தினின்றும் பிறந்தவர்கள். தேவப்பிராம்மணர்கள், பாஞ்சாலர்கள் எனப்பொருள் தருவதாம். ஆருஷேயர் என்பது வசிஷ்ட்டாதி கௌதம ரிஷிகள் மூலம் வந்த கோப்பிராம்மணர்களென்றும், ஸ்தானிகப் பிராம்மணர்களென்றும் பொருள் கொடுக்கும். இதற்கு ஆதாரமாக விஸ்வகர்ம புராணம் சுவிரத காளஹஸ்திமுனி சம்வாதம், " ஸ்ருஷ்டி கர்த்தா பவே த்வஷ்டா " என்ற முதற் சுலோகத்திற்கு அடுத்த 2-ம் சுலோகம் வருமாறு

" ப்ராம்மணானாம் குலம் பூர்வம்-த்வேதா விரஜிதம் சுரை :  
ஆருஷேயம் பௌருஷேயஞ்ச கர்ம ஜென்ம விசேஷத :  
ஆருஷேயம் ருஷிகோ த்ரேஷு வசிஷ்யா னாஞ்சயேபவ :  
ஜென்மனா ஜாயதே சூத்ர : கர்மணா ஜாய தேத்விஜ :  
வேதபாடேன விப்ரஸ்யாத் ப்ரம்மஜ்ஞானேன ப்ராம்மண :  
யத்விஸ்வகர்மணஸ் சாஸ்ய புருஷஸ்ய முகோத்பவம்  
பௌருஷேயம் இதிக்யாதம் பஞ்சகோ த்ரம் மஹத்குலம்  
மனோஸ்தத்ரகுலம் முக்யம் விஸ்வகர்ம முகோத்பவம்  
ஆருஷேயஞ்ச குலம்பேதம் கர்மா ண்யஸ்யவிசேஷத :"

சுலோகத்தின் தாத்பரியம்: பூர்வம் பிராம்மண குலம் இரண்டாக தேவர்களினால் பிரிக்கப்பட்டது. அவையானது, பௌருஷேயமென்றும் ஆருஷேயமென்றும் ஜன்மகர்ம விஷேத்தினால் நிருபணமாகிறது. அதில் வதிஷ்ட்டர் முதலான ரிஷிகளின் கோத்திரத்தில் உண்டானவர்கண் ஆருஷேயரென்றும், விராட் புருஷனாகிய விஸ்வகர்மாவினுடைய முகத்தில் ஜனனமாகிய ஸானகாதி ஐந்து பெறிய கிளைகளோடுள்ள ராஜ விருக்ஷமாகிய குலத்தில் விர்த்தியடைந்தவர்கள் எவர்களோ அவர்கள் பௌருஷேயரென்றும், பிரக்கியாதியடைந்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆருஷேயர்கள் கர்மத்தினால் சிறந்தவர்கள். அதாவது ஜன்மத்தினால் சூத்திரனும் கர்மத்தினால் த்விஜனும், வேதாத்தியத்தினால் விப்பிரனும், பிரம்மக்கியானத்தினால் பிராம்மணனும் ஆகிறார்கள் என்பதுசுருதி வாக்கியம். ஆனால் ஜன்மத்தினால் விசேஷமுடையவர்கள் அதாவது பிறக்கும் போதே பிராமணத்துவம் உள்ளவர்கள் பௌருஷேயப் பிராம்மணர்கள். ஆருஷேயர்களோ பிரம்மக்யானத்தினாலும் வேதாத்தியனத்தினாலும் பிராம்மணர் ஆனவர்கள்.

ஆருஷேயப் பிராமண ஆந்திர பண்டிதர் பிரம்மஸ்ரீ அக்ஷிந்தவ நரசிம்ஹம் பந்துலு அவர்கள் தந்துள்ள அபிப்ராயத்தின் தமிழ்மொழிப் பெயர்ப்பை காண்போம். பரத கண்டத்தை அலங்கரித்திருக்கும் நான்கு வருனத்தாராகிய பிராம்மண-க்ஷத்ரிய-வைசிய-சூத்ரரெனப்படுபவர்களில் முதலானவைகளாகிய பிராம்மண வருணத்தில், விஸ்வகர்ம பிராம்மணர் என்னும் ஒரு வகுப்பாருளர். அவர்கள் பிராம்மணர்களில் சிரேஷ்ட்டஸ்தான உரிமை கொண்டிருப்பதற்கொப்ப, சுருதி-ஸ்மிருதி, புராணங்களும் பல ஆதாரங்களும் கணக்கற்று இருக்க, மற்ற வகுப்பாகிய பிராம்மணர்கள் ஏனோ சம்மதியர்? ஒருவரிடம் சிரேஷ்டத்துவம் இயற்கையாக அமைந்திருக்க, அதை நன்கு விளக்கக் கூடியவாறு பெருமைப்படுத்தி அச்சகோதர வகுப்பாருடைய உன்னதத்தை கண்ணாரக் கண்டானந்திருக்கும் பாக்கியம் பெறாதொழிதல் மற்ற உயர்குலத்தார்க்குப் பெரும் இழுக்காகும். அப்படியக்கின்றி அவர்களுடைய மேன்மையைப் கிறைவுபடுத்த முயல்வது வித்யாஞானமுடையார்க்குச் சிறப்பன்றாம்.

உலகில் இயற்கையாய் விளங்கும் வஸ்துக்களை ஜனங்களுக்கு வெளிப்படையாகக் காட்டுவதற்குப் பிற சாதனங்கள் அனாவசியமாகும். சூரியனைக் கட்ட தீவர்த்தி வேண்டுமா? அவ்வாறே பிராம்மண வருணத்தில் ஒரு வர்க்கமாக யேற்பட்டுள்ளவிஸ்வகர்ம பிராம்மணரின் மேன்மையை தெரிவிக்க சுருதிஸ்மிருதி-புராணங்களாகிய தீவர்த்திக்கள் அவசியமல்ல. சூரினுடைய கிரணங்களின் பிரகாசத்தைப் போல விஸ்வகர்மப் பிராம்மணருடைய மேன்மையைக் காட்ட பிரசித்தியான அவரது இயற்கைத் தர்மங்கள் யாவை என்றும் ஆசங்கையைத் தீர்க்க முயல்வதே இச்சிறு பீடிகையின் முக்கிய நோக்கமாகும்.

இனி, மனோவாக்குகளால் நிச்சயிக்க முடியாத காலம் முதல், அதாவது சற்றேறக்குறைய சிருஷ்டி

காலத்திலிருந்து பௌருஷேயப் பிராம்மணர்களுக்கு தேவப்பிராம்மணர் என்ற பெயர் உண்டு. அதற்கு பிறகு இவர்கள் பாஞ்சாலர்கள் என்ற பெயரை வகித்தனர். இவையிரண்டும் இவர்களுக்கு ஜன்மசித்தமான பெயர்கள். இந்துதேசத்துட்புகுந்த முதற் குழுவினரான ஆரியர்கள் தாங்கள் தேவர்கள் என்றும் தாங்கள் வாசஸ்தலம் தேவ பூமி, அல்லது பிரம்மதேசமென்றும் கூறியிருக்கிறார்கள். அக்கூட்டத்தாருடைய வம்சத்தினர் தேவபிராம்மணர்கள் என்றும் பெயர் கொண்டு விளங்குவதால் பிரம்மவர்த்தத்திலுள்ள ஜனங்கள் பிராம்மணர்களாவதும் அவர்கள் பிற நாட்டவர்கள் போலிராது தேவதேசத்தாரே யாவத்ம் விளக்கமாகிறது. இதற்கு ஆதாரமாக மனுஸ்மிருதியில்

**"ஸாஸ்வதீத்ருஷத் வத்யோர் தேவநத்யோர் யதந்தரம்**
**தம்தேவநிர்மதம் தேசம் பிரம்மா வர்த்தம் பிரசக்ஷதே"**

சரஸ்வதி நதி, திருஷத்வதி நதியென்றும் தேவ நதிகளின் மத்திய பாகம் எதுவோ அது, தேவர்களால் நிர்மிக்கப்பட்டுள்ள பிரம்மா வர்த்தம் என்று சொல்லப்படிருக்கிறது. பிறகு தேவபூமியை அடுத்து வசிப்பவரும், தேவப்பிராம்மணரது அனுக்கிரகத்தைப்பெற்றுத் தவத்தாலும் அத்தவப்பயனாலும் சில ரிஷிமக்கள் பிராம்மணரானார்கள். இவ்வாறு சில காலத்திற்குப் பின், இயற்கையான ஆதிப்பிராம்மணத்துவ முடையவர்களும், அங்கீகாரத்தாலும், செயற்கையாலும் பின் பிரம்மஞானமடைந்து பிராமணத்துவம் பெற்றவர்களுமாக, இருவகை பிராம்மணர் ஏற்பட்டனர். இந்த பேதங்களை அறிந்து கொள்ளும் பொருட்டே அவரவர்களுடைய பிரவரத்தில் " தேவ பிராம்மணேப்ய:" என்றும் " கோ பிராம்மணேப்ய:" என்றும் இரு பிராம்மணவர்க்கப் பெயர்கள் பிரித்து இன்றும் சொல்லப்பட்டு வருதல் பிரசித்தமாயிருக்கிறது.

இனி கோப்ராமண சப்தத்தாலேயே கோ என்னும் சப்தம் பசு என்றும் பூமி யென்றும் பொருளைத் தருவதால் பசு வயிற்றிற் பிறந்த பிராமணர் என்று பொருள் கொள்ள இடமுண்டு. ஸ்தானிக பிராமணர் என்னும் அர்த்தம் வெளிப்படும். இவ்வித பேதங்களாலேயே பிராமணர்களுக்குள், "கோ, தேவ" சப்தங்களுக்கு இடந்தருவதாம். அந்த சப்தங்கள் இன்றுமிருப்பதினால், இந்த முக்கிய பேதங்களை, வெளிப்படுத்தவே அவை ஏற்பட்டனவென்பது வெளிப்படையாம்.

மேலும், பிறப்பினாலும் சந்ததியினாலும், பிராமணத்துவத்தை வகித்த தேவபிராமணர்கள் பௌருஷேயரென்றும், தவ யோக்யதை ஒன்றினால் மட்டும் பிராமணத்துவத்தை அடைந்த கோபிராமணார்கள் ஆருஷேயரென்றும், சொல்லப்படுகிறார்கள். மேற்கண்டவாறு ஆந்திர பண்டிதர் மனச்சான்றுடன் கூறியுள்ள நியாயங்களால் ஆருஷேயர், பௌருஷேயர்களென்றும் இருபிரிவுடைய பிராம்மணர்கள், ஆரியாவர்த்தத்தில் வாழ்ந்து வந்திருக்கிறார்களென்றும் உன்மை வெளிப்படையாகிறது.

மேலும், பௌருஷேயர்கள் ஆரியவர்த்தமென்று கூறும் பாஞ்சால தேசத்தில் வகித்தமையால் பாஞ்சால பிராமணர்களானார்கள் என்பதற்கு ஆதாரம்:- "பிரஹஜ் ஜோதிஷார்ணவ" கிரந்தகர்த்தா ஆருஷேயப் பிராம்மணோத்தமர், பிரம்மஸ்ரீ ஹரிகிருஷ்ண சர்மா அவர்களால் தொகுக்கப் பெற்ற பிராம்மணோத்பத்திகாண்டம் என்னும் சமஸ்கிருத நூல் 51-ம் அத்யாயம், பாஞ்சால ப்ராமணோற்பத்திப் பிரகரணம்: " லிங்கபுராணம் சைவாகமம்" கூறுவதாவது:

1. ப்ராஹ்மணானாம்ச்ச-ஜன்மைவ-சிவவக்தராச்சஜாயதே
   பஞ்சவக்த்ர சமுத்பந்நா:-பஞ்சபி: கர்மபிர்த்விஜா:

2. மனுர்மயஸ்ததா த்வஷ்ட்டா-சில்பிகஸ்ச்ச ததைவச
   தைவஜ்ஞ: பஞ்சமஸ்சைவ-பராஹ்மணா: பஞ்சகீர்த்திதா:

3. மனு: சம்ஹாரகர்த்தாஸ்-மயோவை லோக லோக பாலக:
   த்வஷ்ட்ரா சோத்பத்தி கர்த்தா சில்பிகோ க்ருஹகாரக:

4. தைவஜ்ஞ: ஸர்வபூஷாதி கர்த்தாவை ஹிதகாம்யயா
   லோகனாம் பஞ்ச பஞ்ச பாஞ்சாலா: அபூவம் சிவவக் த்ரதக:

5. பாஞ்சாலானாம்ச்ச-பாஞ்சானாம்-லக்ஷ்யே லக்ஷ்ண முத்தமம்
தஸ்யவிஜ்ஞான மாத்ரேண சில் பாசார: ஸ்புடோ பவத்

6. ஐஸ்வர்யம் மனுரூபஞ்ச-மயரூ பஞ்ச வைஷ்ணவம்
வைரிஞ்சம் த்வாஷ்ரூ ரூபஞ்ச-மாஹேந்த்ரம் சிகஸ்யச

7. ரூபம் நாராயணஸ்யைவ தைவஜ் ஞஸ்யப்ரகீர்த்திதம்
பஞ்சரூபாணி யோவேத முச்யதே ஸர்வகில் பிஷாத்

20. ருக்வேதஸ்ச மனோஸ்சைவ யஜுர்வேதோ மயஸ்யச
ஸாமவேத த்வாஷ்ட்ரகஸ்ய-த்வதாவாசில் பிகஸ்யச

21. ஸுஷும்ணாபித வேதோஸௌ-தைவஜ்ஞனாம் ப்ரகீர்த்தித
பஞ்ச வேதாஸ்ச்ச யோவேத-சாயுஜ்த்ம் லபதேநா:

சுலோகங்களின் பொருள்: - உலகின் கண் பஞ்ச கிருத்தியங்கள் செய்யும் பொருட்டு ஸ்ரீ பரமசிவமாகிய விஸ்வகர்மாவினது ஐந்து முகங்களினின்றும் ஐந்து பிராம்மணர்கள் உண்டானார்கள், அவர்கள் மனு-மய-துவஷ்ட்டா-சில்பி-விஸ்வக்ஞன் என்னும் ஐவர்களாம். அவர்களி மனு சங்காரகர்த்தா, மயன் ரக்ஷிப்பின் கர்த்தா, துவஷ்ட்டா உற்பத்தி கர்த்தா, சிற்பி கிரக முதலியன சிருஷ் கர்த்தா, விஸ்வக்ஞர் பூஷணாதிகளை சிருஷ்டிப்பவர். எனவே மேற்கண்ட ஐந்தொழில் வகையால், ருத்திரன், விஷ்னு, பிரம்மன், இந்திரன், சூரியன் என்னும் ஐவர்களின் அம்சமாக வந்தவர்கள் என்பது குறிப்பாகும். ஆகவே, மேற்கண்ட சிருஷ்ட்டிகளால் இவர்கள் உலகிற்கு இதத்தைச் செய்யும்பொருட்டு பரமசிவமாகிய விஸ்வகர்மாவின் முகத்தினின்றும் தோன்றியவர்களாவர்.

இனி அவர்களின் உத்தமமான லக்ஷணங்களைச் சொல்லுகிறோம். அவைகள் விஞ்ஞானமென்னும் சிற்ப சாஸ்த்திரங்களை உணர்ந்து அதன்படியே நடப்பவர்கள். இன்னும் இவர்கள் ருத்திரன், விஷ்னு, பிரம்மன், இந்திரன், சூரியன் என்னும் பஞ்சமூர்த்திகளின் சொரூபம் உடையவர்கள். இன்னும் இவர்களில் மனு ருக்வேதமும், மயன் யஜுர்வேதமும், துவஷ்ட்டா சாமவேதமும், சில்பி அதர்வணவேதமும், விஸ்வக்ஞன் ஸுஷும்ணாபிதம் என்னும் பிரணவ வேதமும் உரிமையாகக் கொண்டு அத்தியயனம் செய்பவர்கள், அப்படி பஞ்சவேதங்களையும் உணர்ந்த ஐவகை பிராமணர்களை விஸ்வாசிப்பவர்கள் இம்மைமறுமைப் பயன்களாகிய தர்மார்த்தமாதி நான்கையும் அடைவார்கள் என்று ஸ்ரீநந்திகேஸ்வரர் பிருகு புத்திரருக்குச் சொன்னார்.

இதுவே அநாதி விஸ்வகர்மப் பிராம்மண பௌருஷேய விளக்கமாகும்.